## கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம் - 2017

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தொழிற்பாடுகள் மீதான கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1969 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம் (திருத்தப்பட்டது) சட்டத்தின் 6 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதிச் சட்டத்தின் 13(6) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படவேண்டிய 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 செப்தெம்பர் 20 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவேண்டுமென நான் கருதும் மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரை ஆண்டறிக்கை என்பன நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய நிதிக்கூற்றுக்கள் 2019 செப்தெம்பர் 20 வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளதன்மை

கடந்த காலத்திற்காக கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | 2016 |
|---|---|
| **சொத்துக்கள்** | ரூபா |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 6,854,600,350 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 861,720,868 |
| மொத்தம் | 7,716,321,218 |

உரிமையாண்மையும் பொறுப்புக்களும்

| | |
|---|---|
| உரிமையாண்மை | 1,388,648,519 |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 4,801,949,399 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 1,525,723,300 |
| மொத்தம் | 7,716,321,218 |
| மொத்த வருமானம் | 2,635,144,827 |
| மொத்த செலவினம் | 3,138,593,202 |
| பற்றாக்குறை | 503,448,375 |

### 2.3 கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்து செல்லும் தன்மை

2000 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நட்டங்களினை தாங்கிக்கொண்டது. ஆகையினால், 2013 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான தேறிய சொத்துக்கள் ரூபா 7,710,099,424 எதிர்மறைப் பெறுமதியொன்றுக்கு குறைவடைந்திருந்தது. 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மீள்மதிப்பீட்டின் விளைவொன்றாக உருவாக்கப்பட்ட ரூபா 5,780,204,145 மிகைகள் காரணமாக 2015 ஆம் ஆண்டில் தேறிய சொத்துக்களின் எதிர்மறைப் பெறுமதி 2,764,039,908 இற்கு குறைவடைந்திருந்தது. கூட்டுத்தாபனத்தின் பொறுப்புக்களாக பொதுத்திறைசேரியினால் விநியோகிக்கப்பட்ட ரூபா 4,397,000,000 பெறுமதியுடைய திறைசேரி முறிகள் பொதுதிறைசேரியினால் தீர்ப்பனவுசெய்யப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் உரிமை மூலதனத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. ஆகையினால், கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்கள் ரூபா 1,388,648,519 பெறுமதியொன்றாக எடுக்கப்பட்டது.

### 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் றமழான் பண்டிகைக்குத் தேவையான பேரீச்சம்பழ இருப்பொன்றை கூட்டுத்தாபனம் கொள்வனவுசெய்திருந்தது. மேலும், ரூபா 1,413,417 பெறுமதியுடைய போக்குவரத்துக் கட்டணங்கள் மற்றும் துறைமுகத்திடமிருந்து சரக்கு அனுமதிக் கட்டணங்களாக (Cargo Clearance fees) பெறவேண்டிய ரூபா 599,526 தொகையொன்றை அறவிடுவதற்கு 2018 செப்தெம்பர் 14 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மில்கோ (Milco) உற்பத்திகளினை விநியோகிக்கும் முகவரின் தொழிற்பாடுகள் 2018 ஆம் ஆண்டின் பெப்ரவரியளவில் முழுமையாக கைவிடப்பட்டிருந்ததுடன் உற்பத்திகளின் விற்பனை மூலம் அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து 2018 யூலை 31 வரையிலும் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 94,163,920 தொகையொன்று அறவிடப்படவேண்டியுள்ளது.

(இ) 2017 ஆம் ஆண்டில் லங்கா சதோஷ லிமிட்டட்டிற்கு போக்குவரத்து சேவைகளினை விநியோகித்தமைக்காக முறையே 2018 செப்தெம்பர் 14 மற்றும் 2016 ஆம் ஆண்டிற்காக உள்ளவாறு ரூபா 117,688,923 மற்றும் ரூபா 8,833,158 தொகைகள் அறவிடப்படவேண்டியுள்ளது.

(ஈ) நுகர்வோர் சேவைகள் அதிகாரசபைக்கு 2011 ஆம் ஆண்டில் குறுங்கால கடன் அடிப்படையில் அளிக்கப்பட்ட ரூபா 1,000,000 கடன் மற்றும் அவற்றின் மீதான வட்டியினை அறவிடுவதற்கு 2018 செப்தெம்பர் 14 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வாழ்க்கைச் செலவு தொடர்பான உப-குழுவின் தீர்மானமொன்றின் பிரகாரம், 2017 ஆகஸ்ட் 25 தொடக்கம் 2018 ஏப்ரல் 18 வரையான காலப்பகுதியின் போது இந்தியாவிலிருந்து 110,966 மெற்றிக்தொன் அரிசியை கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்திருந்ததுடன், குறித்த அரசி கிரயத்தினைவிடக் குறைந்த விலையொன்றில் விற்பனை செய்யப்பட வேண்டியிருந்ததுடன் அந்த நட்டம் பொதுத்திறைசேரியினால் தாங்கிக்கொள்ளப்படவேண்டும். அரிசியின் இறக்குமதிக்கு அரச வங்கியொன்றிடமிருந்து கூட்டுத்தாபனத்தினால் ரூபா 7,525,575,423 தொகையான கடனொன்று பெறப்பட்டிருந்தது. தாழ்ந்த விலையொன்றில் அரிசி விற்பனையிலிருந்தான நட்டத்திற்கு திறைசேரியிடமிருந்து பெறவேண்டியதாக ரூபா 1,854,265,072 தொகையொன்று காணப்பட்ட அதேவேளை 2018 செப்தெம்பர் 10 அளவில் மேலும் செலுத்தவேண்டிய கடன் ரூபா 6,307,788,128 தொகையாகக் காணப்பட்டது.

## 2.5 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

1991 இன் 31 ஆம் இலக்க கூட்டுறவு மொத்த விற்பனை தாபன (திருத்தப்பட்டது) சட்டத்தின் 2.2(அ) பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் நிதிகள் பொதுக் கம்பனிகளில் மாத்திரம் முதலீடு செய்யமுடியும். அதற்கு முரணாக, ''சதோஷ எக்கனமிக் சென்றர் சேர்விஸஸ் (பிறைவேட்) லிமிட்டட்'' எனும் பெயருடைய 02 அரச கம்பனிகள் பங்கொன்று ரூபா 10 ஆன பெயரளவு பங்கு மூலதனமொன்றை முதலிடுவதன் மூலம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

## 2.6 கூட்டுத்தாபனத்தினால் அல்லது கூட்டுத்தாபனத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட சட்ட நடவடிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 86,397,096 இழப்பீட்டினைக் கோரி 04 நிறுவனங்கள் மற்றும் 32 நபர்களினால் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக 37 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 11 வழக்குகள் தொடர்பில் ரூபா 5,590,457 இழப்பீட்டினை கூட்டுத்தாபனம் செலுத்தியிருந்தது.

(ஆ) ரூபா 101,695,558 இழப்பீட்டினைக் கோரி 07 நிறுவனங்கள் மற்றும் 04 நபர்களுக்கு எதிராக 11 வழக்கினை கூட்டுத்தாபனம் தாக்கல் செய்திருந்ததுடன் அவற்றின்மூலம் ரூபா 2,735,000 தொகையொன்று பெறப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் தூரநோக்கு மற்றும் இலட்சிய நோக்கங்களினை அடைந்துகொள்வதற்கு 2017 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினை மேவுகை செய்யக்கூடியவாறு கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அது காலத்திற்கு ஏற்ற முறையில் மீளாய்வுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டு தொடர்பில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதில் மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம், கடன் மீள்செலுத்துகைத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.1.2 செயற்பாடும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் செயலாற்றல் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டவாறு, ''நவீனமயப்படுத்தப்பட்ட பொருட்களினை கண்டுபிடிக்க / உருவாக்குவதற்கான ஆராய்சி மற்றும் அபிவிருத்தியினை மேற்கொள்ளுதல்'' நோக்கத்தினைப் பூர்த்திசெய்வதற்கு 2017 ஆம் ஆண்டில் கவனஞ்செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டில் ஆரம்பித்து அமுல்படுத்தப்படவேண்டுமென திட்டமிடப்பட்ட தொழிற்பாடுகளின் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சந்தையில் தெரிவுசெய்யப்பட்ட நுகர்வோர் பொருட்களின் விலையில் தளம்பல்களினை குறைப்பதற்கு மற்றும் நிலையான விலையொன்றை ஸ்தாபிப்பதற்கு உள்ளூர் சந்தையிலிருந்து ரூபா 1,000,000,000 பெறுமதியுடைய பொருட்களினை கொள்வனவுசெய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தபோதிலும், அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) கூட்டுத்தாபன ஊழியர்களின் உற்பத்தித்திறன் மற்றும் தொழில்சார் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 300,000 ஏற்பாடுகள் ஒதுக்கீடுசெய்யப்பட்டிருந்தபோதிலும், அவற்றிற்கு குறித்த தொகையில் 24 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 70,690 தொகையொன்று மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின்போது 10 நகரும் விற்பனை மையங்களினை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், எவ்வித நகரும் விற்பனை மையங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கூட்டுத்தாபனத்தின் போக்குவரத்து வருமானத்தை அதிகரிப்பதற்காக அரசாங்க நிறுவனங்கள் / அமைப்புக்களுடன் உடன்படிக்கைகளினை ஏற்படுத்திக்கொள்வதற்கு மற்றும் போக்குவரத்து வருமானத்தை அதிகரிப்பதற்கு குத்தகை முறையில் வாகன குழாத்திற்கு 05 புதிய மோட்டார் வாகனங்களினை சேர்ப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த தொழிற்பாடுகள் மீளாய்வாண்டின்போது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) கூட்டுத்தாபனத்தின் அரசி செயன்முறையின் உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனினை முன்னேற்றுவதற்காக 20,000 மெற்றிக் தொன்கள் அதிஉத்தம மட்டம் வரை பன்னேகமுவ மற்றும் ஹிங்குறாங்கொடயிலுள்ள 02 அரிசி ஆலைகளின் இயளளவினை பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மொத்த இயலளவின் கிட்டத்தட்ட 07 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 1.3 மெற்றிக்தொன்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்ட இயலளவாகக் காணப்பட்டது.

(vi) கூட்டுத்தாபனம் மற்றும் பிரதான முதலீட்டாளர்களுக்கிடையே புதிய வியாபாரம் தொடர்பான கூட்டுமுயற்சி செயற்பாடுகளுக்கான புதிய சந்தர்ப்பங்களினை உருவாக்குவதற்கு அல்லது புதிய பொருட்கள் மற்றும் சேவைகளினை அறிமுகப்படுத்தவதற்கு அல்லது மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தபோதிலும், குறித்த நோக்கங்களினை மீளாய்வாண்டில் அடைந்துகொள்ள முடியாதிருந்தது.

(vii) கூட்டுத்தாபனத்தின் வியாபார இயலளவினை விரிவாக்குவதற்கு மீளாய்வாண்டின்போது வெளித்தரப்பினர்க்கு ரூபா 800,000,000 பெறுமதியுடைய அத்தியாவசியப் பொருட்களினை விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், விநியோகிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதி ரூபா 242,000,000 தொகையாக மாத்திரம் காணப்பட்டது. அது எதிர்பார்க்கப்பட்ட பெறுமதியின் 30 சதவீதத்தினை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

மேலும், கூட்டுத்தாபனத்தின் இயலளவினை விரிவாக்குவதற்காக ஆண்டில் சுதந்திர வியாபார உடன்படிக்கையின் கீழ் 7,000 மெற்றிக்தொன் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் தரம் எதிர்பார்க்கப்பட்ட பெறுமதியின் 55 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 3,850 மெற்றிக்தொன்களாகக் காணப்பட்டது.

(viii) மீளாய்வாண்டின் போது 200 விநியோக மையங்களினை ஸ்தாபிப்பதற்கு கூட்டுத்தாபனம் எதிர்பார்த்திருந்தபோதிலும், எவ்வித விநியோக மையத்தினையும் ஸ்தாபிக்கமுடிந்திருந்தது.

(ix) பாஸ்மதி அரிசி, இறால்கள் மற்றும் சிவப்பு பருப்பின் விற்பனையிலிருந்து ஆண்டின் போது முறையே ரூபா 940,000,000, ரூபா 548,000,000 மற்றும் ரூபா 118,000,000 வருமானம் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உள்ளபடியான வருமானம் முறையே 135,500,000, ரூபா 73,700,000 மற்றும் ரூபா 87,100,000 தொகையாக மாத்திரம் காணப்பட்டது.

(x) 2017 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கட்டிடங்களினை வாடகைக்கு விடுவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரூபா 248,000,000 ஆகக் காணப்பட்ட அதேவேளை, கணக்குகளில் காட்டப்பட்ட வருமானம் ரூபா 225,700,000 தொகையாகக் காணப்பட்டது. மேலும் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 16,000 சதுரஅடி பரப்புடைய கட்டிடங்களின் திருத்தங்களினை மேற்கொள்வதற்கு ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், ஆண்டில் கட்டிடங்களின் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 54,722,228 மதிப்பிடப்பட்ட பெறுமதியுடைய சொத்துக்களினை லங்கா சதோஷ லிமிட்டட்டிற்கு கூட்டுத்தாபனம் அளித்திருந்ததுடன், அதற்காக பணம் அல்லது கம்பனி பங்குகளினை பெற்றுக்கொள்வதற்கு 2018 செப்தெம்பர் 20 வரையிலும் முறையான உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1999 ஆம் ஆண்டில் தனியார் கம்பனியொன்றில் ரூபா 9,923,710 தொகையொன்றை கூட்டுத்தாபனம் முதலீடு செய்திருந்த போதிலும், குறித்த கம்பனியால் தொடரச்சியாக நட்டங்கள் உழைக்கப்பட்டமை காரணமாக 1999 ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை அவற்றிற்கு எவ்வித பங்குலாபங்களும் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) வியாபாரப் பொருட்களின் கொள்வனவுக்காக 2006 ஆம் ஆண்டில் பொதுத்திறைசேரியினால் அளிக்கப்பட்ட ரூபா 275,000,000 கடனை மீளச்செலுத்துவதற்கு 2017 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய 05 ஆண்டுகளில் பொதியிடல் பிரிவிலிருந்தான வருமானத்தின் 95 சதவீதத்திற்கு மேற்பட்ட சதவீதமொன்று வங்கா சதோஷ லிமிட்டட்டிடமிருந்து பெறப்பட்டிருந்தபோதிலும், அது தொடர்பில் இரண்டு தரப்பினர்களுக்கிடையே உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், அவ்வாறான வகையொன்றில் தனியான நிறுவகமொன்றின் மீது பொதியிடல் பிரிவு சார்ந்திருப்பது ஆபத்தானதாகக் காணப்படுகின்றது. இருப்பினும், முகாமைத்துவம் மாற்றுவழி சந்தர்ப்பங்களினை உருவாக்குவதை நோக்கியதாக கவனஞ்செலுத்தியிருக்கவில்லை.

(உ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 36 கட்டிடங்கள் தற்போது காணப்படும் சந்தைப் பெறுமதியை விடக்குறைந்த பெறுமதியொன்றுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. ஆகையினால், மாதாந்தம் ரூபா 4,667,300 விகிதத்தில் வருடாந்தம் ரூபா 56,007,600 வருமானமொன்று இழங்கப்பட்டிருந்ததுடன் முகாமைத்துவம் 03 கட்டிங்களுக்காக 2017 ஆம் ஆண்டில் அவற்றுக்காக எவ்வித வாடகையையும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. அவற்றுக்காக எவ்வித வாடகையையும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. அதற்கமைய, கூட்டுத்தாபனம் ரூபா 448,830 மாதாந்த விகிதத்தில் ரூபா 5,385,960 வருடாந்த குத்தகை வருமானமொன்றை இழந்திருந்தது.

(ஊ) முறையான குத்தகை உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக்கொள்ளாது ரூபா 6,227,414 பெறுமதியுடைய மாதாந்த குத்தகையொன்றுக்கு 14 அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பெருந்தொகையான 39 ஆதனங்களினை கூட்டுத்தாபனம் வழங்கியிருந்தது.

(எ) 2014 திசெம்பரில் ஆரம்பிக்கப்பட்ட "கம சவிய சதோஷ படிய - Gama Saviya Sathosa Badiya" செயற்திட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனத்தினால் நிதிக் குத்தகை அடிப்படையில் கொள்வனவுசெய்யப்பட்ட பின்னர் விற்பனை உதவியாளர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட ரூபா 1,456,368 பெறுமதியுடைய லொறியொன்று, குறித்த செயற்திட்டம் நிறுத்தப்பட்ட பின்னர் 02 வருடங்களுக்கும் அதிகமான காலப்பகுதியொன்று கடந்திருந்தபோதிலும், இதுவரை கூட்டுத்தாபனத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ஏ) லங்கா சதோஷ லிமிட்டட்டிற்கு கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தினால் விநியோகிக்கப்பட்ட விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்ட பெறுமதியைவிடக் குறைந்த பெறுமதியொன்றை லங்கா சதோஷ லிமிட்டட் செலுத்துகின்றதுடன் 16 தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்புக்களில் அவ்வாறு குறைவாகப் பெறப்பட்ட தொகை ரூபா 742,438 ஆகக் காணப்பட்டிருந்தது. அவற்றிற்கான விபரங்களினை அழைப்பதன் மூலம் லங்கா சதோஷ லிமிட்டட்டிடமிருந்து நிலுவையாகவுள்ள தொகைகளினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இதன் காரணமாக, பெறுமதி சேர் வரியின் கணிப்பீட்டில், விலைப்பட்டியல்களின் பெறுமதி அடிப்படையாகக் காணப்படல்வேண்டும். ஆகையினால், தொகையொன்றுக்காக செலுத்தப்படவேண்டிய பெறுமதி சேர் வரி கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப்பெறவில்லை.

(ஐ) 2018 சனவரி 31 அளவில் மில்கோ செயற்திட்டம் பூர்த்தியடைந்திருந்த போதிலும், முகாமைத்துவம் அதனுடன் தொடர்புடைய லொறி உரிமையாளர்களுக்கு முன் அறிவித்தலினை வழங்கியிருக்கவில்லை. ஆகையினால், உடன்படிக்கைகளின் பிரகாரம், சேவைகளினைப் பெற்றுக்கொள்ளாது பெப்ரவரி மாதத்திற்காக குளிரூட்டி வசதிகளுடன் 3 லொறிகளுக்கான வாடகையாக ரூபா 416,000 தொகையொன்று செலுத்தப்படவேண்டியுள்ளது.

மேலும், 2017 திசெம்பரில் காலாவதியாகியிருந்த உடன்படிக்கை காலப்பகுதிக்கான லொறியொன்றுக்கு 2018 சனவரி மாதத்திற்காக ரூபா 112,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் குறித்த லொறி தொடர்புடைய ஓட்டத்தில் குளிரூட்டி வசதிகளின்றி ஈடுபட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டில் இரண்டு மாதங்களின்போதுகூட ரூபா 224,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஒ) 2017 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் அமுல்படுத்தப்பட்ட 4 பிரதான செயற்திட்டங்களுடன் தொடர்புடைய வருமானம், செலவினம், இலாபம் / நட்டம் மற்றும் மீதமாகவுள்ள இருப்புக்களினை இனங்காண்பதற்கு 2018 ஒக்தோபர் 04 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 பதவியணியினர் நிர்வாகம்

கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் முகாமைத்துவ தரத்தில் 25 பதவிகள், முகாமைத்துவ உதவியாளர் மட்டத்தில் 51 பதவிகள் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 248 பதவிகள் உள்ளடங்கலாக மொத்தமாக 322 பதவிகளினைக் கொண்டிருந்த அதேவேளை 2018 யூலை 31 அளவில் மிகைப் பதவியணியினர் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை முறையே 220 மற்றும் 34 ஆகக் காணப்பட்டன.

## 4. நிலைபேறான அபிவிருத்தி

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைந்துகொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனங்களும் செயற்படவேண்டியதுடன் கூட்டுறவு மொத்தவிற்பனை ஸ்தாபனம் அதன் பரப்பெல்லையின் கீழ் காணப்படும் தொழிற்பாடுகளினை நிறைவேற்றும் வழிமுறைமைபற்றி அறிந்திருந்ததுடன் இலக்குகளினை அடைந்துகொள்வதற்கு தேவைப்படும் குறிக்கோள்களினையும் அவற்றுடன் தொடர்புடைய பல்வேறுபட்ட குறிகாட்டிகளையும் சுமாராக இனங்கண்டிருந்தது. இருப்பினும் அவற்றின் அமுல்படுத்தலுக்குத் தேவையானதாக இனங்காணப்பட்ட மனித மற்றும் பௌதீக வழங்கல் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட மற்றும் அவற்றிற்கான ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அறிக்கையுடனான தொடர்பு | பந்தி |
|---|---|
| (அ) 2011 இன் 4.2 ஆம் பந்தி | ரூபா 5,097,445 பெறுமதியுடைய 12 மின்சார மோட்டார் கொள்கலன்களின் தவறுகை |
| (ஆ) 2011 இன் 4.8 ஆம் பந்தி | 2006 செப்தெம்பரில் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதிசெய்யப்பட்ட ரூபா 14,501,998 கிரயமுடைய 140 அரிசி செயன்முறைப்படுத்தல் இயந்திரங்கள் 2016 செப்தெம்பர் 13 வரையிலும் கூட்டுத்தாபனத்தின் உட்பகுதியில் தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றமை. |
| (இ) 2012 இன் 2.2.3(உ) பந்தி | வருடாந்த குத்தகை வாடகை மற்றும் 2011 ஆம் ஆண்டிற்கான வெளிநாட்டு மதுபான அனுமதிப்பத்திரக் கட்டணங்களாக லங்கா சதோஷ லிமிட்டட்டிமிருந்து பெறவேண்டிய ரூபா 71,561,640 தொகையொன்றை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கைஎடுக்கத் தவறியமை. |
| (ஈ) 2012 இன் 4.3(ஆ) பந்தி | உணவு ஆணையாளர் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது வாடகை அடிப்படையில் பெறப்பட்ட உணவு ஆணையாளர் திணைக்களத்தின் 02 களஞ்சியங்களில் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 78,978,504 கிரயமுடைய அரிசி ஆலைகளின் நிர்மாணம் |
| (உ) 2012 இன் 2.2.3(ஈ) பந்தி | மோட்டார் வாகனங்களின் விற்பனையிலிருந்தான இலாபம் ரூபா 5,101,356 தொகையாகக் காணப்பட்ட போதிலும், இது நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,892,489 ஆகக் காட்டப்பட்டிருந்தமையால், நிதிக்கூற்றுக்களில் ரூபா 791,133 தொகையொன்றின் மூலம் மோட்டார் வாகனங்களின் விற்பனையிலிருந்து இலாபம் மிகைத்துக்குறிப்பிடப்பட்டது. |
| (ஊ) 2012 இன் 2.2.4(ஆ) பந்தி | 2012 ஆம் ஆண்டிற்கான பரீட்சை மீதியின் பரீட்சிப்பில் நிதிக்கூற்றுக்களில் 168 சொத்துக்கள் மற்றும் செலவினங்களுடன் தொடர்புடைய ரூபா 27,584,061,602 கூட்டுத்தொகையான வரவு மீதிகள் மற்றும் 110 பொறுப்புக்கள் மற்றும் வருமானத்துடன் தொடர்புடைய ரூபா 30,129,471,178 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் இணக்கஞ்செய்யப்படாது காணப்படுகின்றமை. |

| | | |
|---|---|---|
| (எ) | 2012 இன் 2.2.4(ஆ) பந்தி | நடைமுறைப்பொறுப்புக்களின் கீழ் TR கடனின் கீழ் மக்கள் வங்கியிடமிருந்து கூட்டுத்தாபனத்தனால் பெறப்பட்ட குறுங்கால கடனொன்று ரூபா 207,050,943 தொகை நிதி நிலைமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்தபோதிலும், வங்கியால் அனுப்பப்பட்ட மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் குறித்த கடன் மீதி ரூபா 207,097,942 தொகையாகக் காணப்பட்டது. |
| (ஏ) | 2012 இன் 2.2.5(அ) பந்தி | 2012 திசெம்பர் 31 வரை பொதியிடல் பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற வெள்ளைச் சீனியின் மொத்த கனியத்தில் 15,000 கிலோகிராம் கனியத்துடன் தொடர்புடைய ரூபா 18,450 கட்டணமொன்றின் வித்தியாசம் மற்றும் 23,514 பைக்கட்டுக்கள் அல்லது 170,119 கிலோகிராம் பொதியிடல் மூலப்பொருட்களின் பற்றாக்குறையுடன் தொடர்புடைய வருமான இழப்பு தொடர்பான இடரின் மீது முகாமைத்துவத்தினால் இதுவரை நடவடிக்கை எடுக்கத்தவறியமை. |
| (ஐ) | 2013 இன் 2.2.3(அ) iii பந்தி | நிதிக்கூற்றுக்களுடன் பரீட்சை மீதியின் ஒப்பீட்டில், 03 கணக்குகளின் மீதிகளில், ரூபா 299,798,933 வித்தியாசமொன்றின் வெளிப்படுத்தல் காணப்பட்டது. |

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள்** | | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| (அ) கணக்கீடு | (i) | பேரேட்டுக் கணக்குகளுக்காக குறியீட்டு இலக்கங்களினைப் பயன்படுத்தாமை. |
| | (ii) | நாளேட்டு உறுதிச்சீட்டுக்களுக்காக துல்லியமான குறிப்புரைகளினைப் பயன்படுத்தாமை. |
| | (iii) | உறுதிச்சீட்டுடன் தொடர்புடைய சான்றுப்படுத்தும் ஆவணங்களினை முறையாக இணைக்காமை. |
| (ஆ) இருப்புக்கள் மீதான கட்டுப்பாடு | | வருடாந்த பௌதீக இருப்பு மெய்மையாய்வுகளினை நடாத்துவதற்குத் தவறியமை மற்றும் இருப்புக்களின் தற்போதைய பெறுமதியை இனங்காணாமை. |
| (இ) சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு | (i) | நிலுவையாகவுள்ள குத்தகை வாடகைகளினை அறவிடுவதற்கு போதுமான அளவிடைகளினை எடுக்கத் தவறியமை. |
| | (ii) | முறையாக குத்தகை உடன்படிக்கைகளினை ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான குத்தகை ஆதனங்களினை குத்தகைக்கு விடுவதற்கு அல்லது |

காலாவதியாகிய உடன்படிக்கைகளினை புதுப்பிப்பதற்கு அல்லது குத்தகை ஆதனங்களின் நிர்வாகத்தில் பலவீனங்கள் காரணமாக குத்தகை செயற்பாடு பூர்த்தியடைந்த பின்னர் மீண்டும் ஆதனங்களினை கையளிப்பதற்கு கவனஞ்செலுத்த தவறியமை.

(iii) தற்போது காணப்படும் சந்தைப் பெறுமதியை விடக்குறைந்த பெறுமதியொன்றுக்கு கூட்டுத்தாபனத்தினால் உரிமையைக் கொண்டுள்ள ஆதனங்களினை குத்தகைக்கு விடல்.

(iv) தற்போது சந்தையில் காணப்படும் விகிதத்தின் பிரகாரம் குத்தகை ஆதனங்களின் குத்தகை வாடகையினை மீளமைப்பதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருந்தபோதிலும், அவ்வாறான சந்தர்ப்பங்களில் குத்தகையின் அடிப்படையில் ஆதனங்களினை எடுத்திருந்த நிறுவனங்கள் உடன்படுகின்றனவாகக் காணப்படவில்லை. ஆகையினால், அதன் தற்போதைய குத்தகை வாடகையின் அடிப்படையில் உடன்படக்கூடியதாக கலந்துரையாடல்களினை நடாத்துவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(v) ஏற்பட்ட குறைபாடுகள் மற்றும் அவற்றின் பொறுப்புடைய நபர்களினை கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை

(vi) போக்குவரத்து வசதிகளின் விநியோகத்திற்கான உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக்கொள்ள தவறியமை

(vii) நியாயமான காலப்பகுதியொன்றுக்குள் விலைப்பட்டியல்களினை வழங்கத் தவறியமை.

(viii) லங்கா சதோஷ லிமிட்டட்டின் களஞ்சியங்களிலிருந்து சதோஷ லொறிகளுக்கு பொருட்களினை ஏற்றுகையில், அவற்றுக்காக பொறுப்புடைய உத்தியோகத்தரொருவரின் மேற்பார்வை காணப்படாமை.

(ix) லங்கா சதோஷ லிமிட்டட்டிற்கு விலைப்பட்டியல்களினை அனுப்புவதற்கான காலப்பகுதியை இழிவளவாக்குவதற்கு மற்றும் நிச்சயமாக குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்குள் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கவேண்டிய பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கத்தவறியமை.